முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1254

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.03.2023, திங்கட்கிழமை

1. அறம் வேலிகொண்ட அண்ணலே
   ஆக்கமுடன் உலகை மாற்றும் வண்ணம்
   வரம்தருகின்ற வாழுகின்ற ஞானியே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 22 ம் நாள், 06.03.2023, திங்கட்கிழமை)
   உரைத்திடுவேன் அரங்கனுக்கு சக்தி பலம் கூட
   வகைபட அரங்கனுள் யானிருந்து
   வையகத்தையே மாற்றும் வித்தையை
3. வித்தையை அரங்கன் வழி வேதமாக
   வின்னுலகமே வியக்க சன்மார்க்க நெறிகளாக
   அதனோடு தர்மத்தையும் கூட்டி
   அற்புதத்தை நடத்தி வருதல் காண
4. காணவே அரங்கன் தொடர்புகொண்ட
   அடியவர்கள் மூலமாகத்தான் இந்த மாற்றம்
   ஞானலோகமாக உலகமெங்கம் நடக்கும்
   நன்மை கருதி அரங்கனை தேடி வந்து தீட்சை ஏற்று
5. ஏற்று அரங்கன் தர்மத்தை
   உலகமெல்லாம் செய்யும் மக்களுக்கு
   மாற்றம் சடுதி நடந்தேறும்
   மரணத்தை வெல்லும் மகா சக்தியும் கிட்டும்
6. கிட்டவே அற்புதத்தை
   குறையில்லா அரங்கன் குடிலில் இருந்து
   திட்டமிட்டு ஆறுமுகன் யான்
   தேசமெல்லாம் இயக்கமாக்கி வருதல் காண
7. காணவே அரங்கனை கண்டால் போதும்
   கலியுகத்தில் அரங்கன் குடில் அமுதை உண்டால் போதும்
   ஞானம் பெற்று உலகோர் ஞானிகளாகவே
   ஞானயுகம் படைக்கும் சக்திகளாகவே மாற்றம் கண்டு உயர நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–